**திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் “உதவி மையம்”**
**மாண்புமிகு தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர்**
**முனைவர் கோவி. செழியன் அவர்கள் திறந்து வைத்தார்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க. ஸ்டாலின்** அவர்களின் வழிகாட்டலின்படி, அனைத்து கல்வி நிறுவனங்களிலும் மாணவ, மாணவியர், ஆராய்ச்சி மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பட்டப்படிப்புகள், ஆராய்ச்சிப் படிப்புகள், உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை முதலான விபரங்கள் அனைத்தையும் வழங்கும் **“உதவி மையம்”** ஏற்படுத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய உதவி மையம் அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் உடனே ஏற்படுத்த அரசு கடிதம் எண்:2132/H2/2024 நாள்:07-11-2024-ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதற்கட்ட நிகழ்வாக திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 2024 நவம்பர் 12 செவ்வாய்க்கிழமை காலை 8:30 மணியளவில் மாண்புமிகு தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் **முனைவர் கோவி. செழியன்** அவர்கள் உதவி மையத்தை திறந்து வைத்தார்.

பாரதிதாசன் பல்கலைக்கழக முதன்மை நுழைவுவாயிலில் உள்ள இந்த உதவி மையம் மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தனிநபர் தேவையின் அடிப்படையில் அனைத்து தகவல்களையும் ஒருங்கிணைத்தும் வெளிப்படை தன்மையுடனும் ஒரே இடத்தில் வழங்கவும் மற்றும் வழிகாட்டவும் என பன்முக உதவிகளை மேற்கொள்ளத்தக்க தகுதிவாய்ந்த நபர்களையும் தகவமைப்புகளையும் கொண்டு செயல்பட உள்ளது. தகவல் மையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் மாண்புமிகு தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் இணையவழியாக பெறப்படும் குறைகளைத் தீர்க்கவும் தொலைபேசி வாயிலாக கேட்கப்படும் தகவல்களுக்கு பதிலளிக்கவும், பல்கலைக் கழகத்திற்கு நேரில் வரும் மாணவர்களின் தேவைகளை உடனுக்குடன் தீர்க்கவும் இத்தகவல் மையம் செயல்படும் என்று கூறினார். மேலும், வரும் நாட்களில் இத்தகவல் மையம் மாவட்ட குறைதீர் மையத்துடன் இணைந்து செயல்படும் விதத்தில் மேம்படுத்தப்படும் என்றும் கூறினார்.

இந்நிகழ்வில், தமிழ்நாடு அரசின் உயர்கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் Dr. K. கோபால், இ.ஆ.ப. அவர்கள், தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின் துணைத் தலைவர் திரு. M.P. விஜயகுமார். இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் திரு. பிரதீப்குமார், இ.ஆ.ப. அவர்கள், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் G. ரவி அவர்கள், தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின் அலுவலர்கள் ஆகிய பலரும் பங்கேற்றனர்.

பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ம. செல்வம், அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பதிவாளர் முனைவர் இரா. காளிதாசன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர்.

**பதிவாளர்** (பொ)


BHARATHIDASAN UNIVERSITY
TIRUCHIRAPPALLI - 620 024
HELP DESK உதவி மையம்
Escalation Procedure மேல்முறையீட்டு வழிமுறைகள்
Section & Level
Registrar Office
CoE
CDOE
Scholarship
Finance Officer
Ph.D.
Hostel
Other Section
I - Level
Nodal Officer, Help Desk
email ID: helpdesk@bdu.ac.in
Contact No: 0431-2407272
II - Level
PA to Registrar
PA to CoE
Assistant Registrar
Nodal Officer
Assistant Registrar
Assistant Registrar
Deputy Warden
PA to Registrar
III - Level
Assistant Registrar
DR/AR CoE
Director CDOE
Assistant Registrar
Chief Hostel Admin
Assistant Registrar
IV - Level
V - Level
VI - Level


BHARATHIDASAN UNIVERSITY
Core Values

**“HELP DESK” inaugurated by**
**Hon’ble Minister for Higher Education Dr. Govi. Chezhiaan**
**at Bharathidasan University, Tiruchirappalli**

As per directive of the Hon'ble Chief Minister of Tamil Nadu, **Thiru.M K. Stalin** to establish "Help Desk" in all educational institutions for the benefit of students, research scholars, parents and the general public to easily get details of Degree Programmes, Research Programmes, Guidelines for admission to higher education programmes, etc., **“Help Desk”** was established in Bharathidasan University, Tiruchirappalli. As per Government letter No:2132/H2/2024-1 dated 07-11-2024, the Hon'ble Minister for Higher Education, Government of Tamil Nadu, **Dr. Govi. Chezhiaan,** Inaugurated the Help Desk at Bharathidasan University, Tiruchirappalli on $12^{th}$ November 2024, Tuesday at 8:30 a.m.

The Help Desk opened today forenoon at the Administrative Building of Bharathidasan University, is managed by a multidisciplinary team of qualified, well-informed persons and facilitators who will coordinate all the information based on individual needs for the benefit of service seekers, namely, students, research scholars and others. During the inauguration, the Hon’ble Minister told that the Help Desk will also address Online Grievances, Telephone Queries, In-person Queries and in future will be linked to the District Grievance Cell for further assistance.

Dr. K. Gopal, IAS, Additional Chief Secretary, Higher Education Department, Thiru. M.P. Vijaya Kumar, IAS (Retd.), Vice-Chairman, Tamil Nadu State Council for Higher Education, Thiru Pradeep Kumar, IAS, Tiruchirappalli District Collector and Dr. G. Ravi, Vice-Chancellor of Alagappa University, Karaikudi, also attended the event.

This event was held at Bharathidasan University, Palkalaiperur Campus, in the presence of Prof. M. Selvam, Vice-Chancellor, Prof. R. Kalidasan, Registrar i/c, Syndicate Members, faculty members, students and staff of Bharathidasan University.

**REGISTRAR** i/c